allotted, so far, 80 houses have been allotted to persons already owning houses of their own in the locality, and

(b) if so, how they are entitled for the allotment of houses?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Of the 100 houses that have been constructed and occupied, 43 were allotted to those who already own houses of their own.

(b) Rules do not prohibit the allotment of a house to a member already owning a house. As the houses owned by these members were unhygenic and unsuited for working looms, the society allotted houses in the colony to those members. However, no weaver without a house has been denied allotment.

திரு. வி. எஸ். எஸ். மணி : நெசவாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கப்படும் வீடு குடியிருக்க வசதியாக இருக்கிறது. ஆனால் தறி போடுவதற்கு வசதி இல்லாமல் இருக்கின்றது. ஆகவே அதற்கென்று தனி இடமாக ஒதுக்கவேண்டிய ஏற்பாட்டைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் அந்த வீடுகளை எல்லாம் பார்த்து இருக்கிறேன். வசிப்பதற்கு வசதியாக இருப்பதோடு, தறிபோடுவதற்கு 20-க்கு 12 அல்லது 20-க்குப் பத்து என்று பெரிய ஹால் விடப்பட்டு இருக்கிறது. ஹாண்டுலூம் டைரெக்டர், ஸ்டேட் கோஆபரேடிவ் சொஸைடி பிரஸிடெண்ட் ஆகியவர்கள் பார்த்து அவை வசதியாக இருக்கின்றன என்றுதான் அப்ரூவ் செய்திருக்கிறார்கள்.

விவசாயப் பள்ளிகள், சேலம் மாவட்டம்.

*** 429 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் எத்தனை விவசாயப் பள்ளிகள் எங்கெங்கு இருக்கின்றன ?

THE HON. SRI P. KAKKAN : There is only one agricultural School in Salem district. It is located at the State Seed Farm, Papparapatti.

சேலம் மாவட்டத்தில் ஒரே ஒரு வேளாண்மைப் பள்ளிதான் உள்ளது. அது பாப்பாரப்பட்டியிலுள்ள அரசாங்க விதைப் பண்ணையில் இருக்கிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிகளில் எவ்வளவு காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு வருஷத்திற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : எந்த அடிப்படையில் இந்தப் பள்ளிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

28th March 1964]

கனம் திரு. பூ. கக்கன் : பதினெட்டு வயதிற்குமேல் 30 வயதிற்கு உள்ளாக இருக்கக்கூடியவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அதுவும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு இவர்களுக்கு 2 வருஷம் நேரிடை விவசாய அனுபவம் இருக்கவேண்டும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : சேலம் மாவட்ட விவசாயப் பள்ளியைப் பற்றிச் சொன்னார்கள். நமது மாநிலத்தில் வேறு எங்கெங்கே வைக்கப்பட்டு இருக்கின்றன என்பது பற்றி பட்டியல் ஒன்றை மேசையின்மீது வைப்பார்களா? அல்லது இப்பொழுதே சொல்லுவார்களா?

கனம் திரு. பூ. கக்கன் : சொல்லிவிடுகிறேன். 1961-இல் ஆறு இடங்களில் விவசாயப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன :

1. Agricultural School, Agricultural Research Station, Bhavanisagar.

2. Agricultural School, State Seed Farm, Sakkottai, Tanjore District.

3. Agricultural School, Agricultural Institute, Katpadi, North Arcot District.

4. Agricultural School, Agricultural Research Station, Paramakudi, Ramanathapuram District.

5. Agricultural School, State Seed Farm, Kakuppam, South Arcot District.

6. Agricultural School, State Seed Farm, Karaiyiruppu, (Tirunelveli district).

1962-63 ல் கீழ்கண்ட இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

1. Agricultural School, Papparapatti, Salem District.

2. Agricultural School, Vijayanagaram, Ooty.

3. Agricultural School, Conjeevaram, Chingleput District.

4. Agricultural School, Tiruvarankulam, Tiruchirappalli District.

5. Agricultural School, Y.M.C.A. Marthandam, Kanyakumari District.

மதுரையில் வைப்பதாகயிருந்தது. இடம் அப்போது கிடைக்காத காரணத்தினால் வைக்கவில்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்த விவசாயப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் எப்படிப் பயன்படுத்தப் படுகிறார்கள்? அவர்கள் கிராமத்திலே இருக்கும் மற்ற விவசாயிகளுக்கும் ஊக்கம் அளிக்கும் வகையிலே ஈடுபடுத்தப்படுகிறார்களா அல்லது அவர்கள் நம் சொந்த விவசாயத்தை மட்டும் சீர்திருத்தும் முயற்சியில் மட்டும் ஈடுபடுகிறார்களா?

[28th March 1964

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் தங்களுடைய நிலத்தில் அதிகமாக விவசாயத்தை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அங்குள்ள மற்ற விவசாயிகளுக்கும் உதவி புரிய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் பணி புரிகிறார்கள்.

திரு. மு. சண்முகம் : இதுவரையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் தங்களுடைய சொந்த நிலத்தில் தாங்கள் பயிற்சி பெற்ற வகையில் பயிரிட்டு வருகிறார்களா என்பதை அரசாங்கம் கவனித்து இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. பயிற்சி பெற்றவர்கள் வெறுமனே இருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில்தான் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : பயிற்சி பெற்றவர்களுக்கு விவசாயத் துறையில் வேலை கொடுக்கப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : வேலை கொடுப்பதற்காகப் பயிற்சி கொடுப்பதில்லை. தங்களுடைய கிராமத்தில் விவசாயிகளுக்கு ஒத்தாசை உதவி செய்யவும், தங்களுடைய நிலத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்குமே பயிற்சி அளிக்கப்படுகிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்தப் பள்ளியில் பயிற்சி கொடுக்கப்படுபவர்கள் வேலைக்கு லாயக்கில்லாதவர்களாக இருக்க வேண்டும். கிராமத்திற்குச் சென்று அதிகமாக விவசாயத்தைப் பெருக்குவதற்காகப் பாடுபடுவர்களையே இதில் அதிகமாகச் சேர்த்துக் கொள்கிறோம்.

திரு. கரு. சீமைச்சாமி : அந்தப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு எவ்வளவு படித்திருக்கவேண்டும் ?

கனம் திரு. பூ. கக்கன் : எட்டாவது ஸ்டாண்டர்டு அல்லது மூன்றாவது பாரம் படித்திருக்கவேண்டும்.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : இப்போது வட சேலம் மாவட்டத்தில் ஒரு விவசாயப் பள்ளி இருக்கிறது. தென் சேலம் மாவட்டத்தில் ஒன்றைத் துவக்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது சொல்வதற்கில்லை. பின்னால் அரசாங்கம் யோசித்து முடிவு செய்யும்.

திரு. தா. சின்னசாமி : சென்னை மாகாணத்தில் ஏழை விவசாயிகளுக்கும் ஹரிஜனங்களுக்கும் செலவிடும் தொகை எவ்வளவு ?

(பதில் இல்லை).

திரு. ம. கமலநாதன் : இந்தப் பள்ளியில் என்ன வகையான பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன ? ஓராண்டுப் பயிற்சியில் ஆரம்பத்தில் சேர்ந்த மாணவர்கள் கடைசி வரை தொடர்ந்து படிக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயம் எப்படிச் செய்வது, என்னென்ன உரங்களை எந்தெந்த நிலத்திற்குப் போடுவது, எந்தெந்தக் காலத்தில் என்னென்ன பயிர்களைப் பயிரிடுவது என்பதெல்லாம் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

28th March 1964]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மதுரை மாநகரத்தில் இடம் கிடைக்காத காரணத்தால் விவசாயப் பள்ளி அமைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். மதுரையில் இடம் மதுரை நகரை ஒட்டி இருக்க வேண்டுமா? எத்தனை ஏக்கர் வேண்டும். தண்ணீர் வசதி எவ்வளவு வேண்டும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

கனம் சபாநாயகர் : இந்த விவரங்களை எல்லாம் ஆபீசில் சென்று கேட்டுக் கொள்ளலாம். சட்டசபையில் கேட்க வேண்டியதில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இதிலே பயிற்சி பெறும் மாணவர்களை கிராம சகாயக்குகளாக நியமிக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : லாயக்கு உள்ளவர்களை கிராம சகாயக்குகளாகவும் தேர்ந்தெடுக்கலாம்.

திரு. எம். எஸ். மணி : அந்த மாணவர்களுக்கு நிலங்களிலும் நேரடியாக பயிற்சி கொடுக்கப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்க விதைப் பண்ணைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : 1964-65-ல் புதிதாக ஏற்படுத்தப்பட இருக்கிற புதிய விவசாயப் பயிற்சிப் பள்ளிகள் எங்கெங்கே ஏற்படுத்தப்படும்? அதிலே திண்டிவனம் தாலூகா இடம் பெற்றிருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : ஆரம்பிக்கப்பட்ட விவசாயப் பள்ளிகளில் இதுவரை எத்தனை மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பள்ளிகளில் பயிற்சி பெறுகின்றவர்களுக்கு விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் பக்கத்தில் இருந்தால் அங்கும் அவர்களைக் கூட்டிக் கொண்டு போவார்கள்.

Quarters in Rubber Plantations

* 430 Q.—Sri R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food be pleased to state :

(a) whether staff quarters for the officers of Rubber plantations in Kanyakumari district have been constructed; and